பக்கங்கள்:-20

# காலை முரசு

நான்கு கலால் அதிகாரிகள் உட்பட

## 8 சந்தேகநபர்கள் கஞ்சாவுடன் கைது

நீர்கொழும்பு மற்றும் சிலாபம் பகுதிகளில் கேரள கஞ்சாவுடன் நான்கு கலால் அதிகாரிகள் உட்பட 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி 8 பேரும் 06

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 19 | செவ்வாய்க்கிழமை | 02.04.2024 | அதிர்வு 245

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நடத்த இந்தியாவுக்கு உதவி செய்தது யார்?

## மைத்திரியின் கருத்து பாரதூரமானது என்று நாடாளுமன்றத்தில் சஜித் அணி சுட்டிக்காட்டு





"உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இந்தியா இருக்கின்றது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுவது உண்மையாயின் குண்டுத் தாக்குதலை நடத்த இந்தியாவுக்கு உதவி செய்தது யார் என்பதையும் அவர் பகிரங்கப்படுத்த வேண்டும். மைத்திரிபால சிறிசேனவை எவரோவொருவர் இயக்குகின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். 06

# கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்பு

## மூதூர் பொலிஸார் தீவிர விசாரணை

மூதூர் – பஹ்றியா நகர் களப்பிலிருந்து நேற்று குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மூதூர் – பஹ்றியா நகரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 39 வயதான நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவரின் கை, கால்கள் கயிற்றினால் கட்டப்பட்டு மணல் மூடையொன்றும் வயிற்றில் கட்டப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர், சடலம் பிரேத பரிசோதனைகளுக்காகத் திருகோணமலை பொது 06



# பிரித்தானியாவில் இருந்து வந்த இளைஞன் பொலிஸாரால் கைது

(வவுனியா நிருபர்)

பிரித்தானியாவில் இருந்து இலங்கை வந்த இளைஞன் ஒருவர் மாத்தளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை அம்மன் கோயில் பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

33 வயதுடைய செல்வராசா மேனகன் என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். 06







தேர்தல்கள் நெருங்கும் சமயத்தில், தேர்தல் செலவினத்துக்கு நிதி திரட்டும் வாய்ப்பு என்ற பெயரில் ஒரு பிஸினஸ் கொடிகட்டிப் பறப்பதாகப் பேச்சடிபடுகின்றது.

மதுபானச் சாலைகளை திறப்பதற்கான உரிமங்கள் அரசியல்வாதிகள், அவர்களூடாக ஆதரவாளர்கள் என்று பலருக்கும் அள்ளி வீசப்படுகின்றன.

நிதி அமைச்சரான ஜனாதிபதியின் தாராள மனப்பான்மை பலருக்கும் கஜானாவை நிரப்பி வருவதாகத் தகவல்.

பல இடங்களில் சில மில்லியனுக்குப் போன ரேட், சில இடங்களில் கோடியை எட்டி இருப்பதாகவும் அதிர்ச்சித் தகவல் 06




# பிலிப் குணவர்தனவின் நினைவு தினம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது

இலங்கையில் சோசலிச இயக்கத்தை உருவாக்க முன்னோடியாக பணியாற்றிய, மறைந்த பிலிப் குணவர்தனவின் 52 ஆவது நினைவுதின நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தர் கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமஸ்ரீ மகா சங்கசபை மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய இத்தேபான தம்மாலங்கார முன்னிலையில் நினைவு தின வைபவம் நடைபெற்றது.

சுற்றுச் சூழல் விஞ்ஞானி பேராசிரியர் ரணில் சேனாநாயக்க "சுற்றுச்சூழலும் அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் முக்கிய உரையை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில், பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்கள், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கல்விமான்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அரச அதிகாரிகள், விசேட அதிதிகள் மற்றும் பிலிப் குணவர்தன குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.














# ஏப்ரல் விடுமுறையின் பின் ஆசிரியர் நியமனங்கள்!

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தகவல்

"மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் ஏப்ரல் விடுமுறைக்கு பின்னர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்போம்."

– இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்புகையில் –

"மேல்மாகாணத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் நிலையில், 2,300 தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் 2700 வெற்றிடங்கள் நிலவுகின்றன. மொத்தம் 5,453 வெற்றிடங்கள் காணப்படுவதால், எஞ்சிய ஆள் சேர்ப்புகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, நாட்டில் 40 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்றனர். தொழில் இல்லாமல் வீதியில் இருக்கும் இந்த பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கத்தின் வேலைத் திட்டம் என்ன? இவர்கள் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்றார்.

இதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளிக்கையில் –

"மேல் மாகாணத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரீட்சை நடத்தி, பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆசிரியர் வகையின் அடிப்படையிலுமே ஆரம்பகட்டமாக 2,400 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.



பரீட்சையில் சித்தியடைந்த ஏனையவர்கள் தொடர்பில் இந்த நாள்களில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஏப்ரல் விடுமுறைக்கு பின்னர் அவர்களுக்கும் நியமனம் வழங்க முடியும் என நம்புகிறேன்.

அதேநேரம் விஞ்ஞானம், கணிதம், தொழிநுட்பம், ஆங்கில பாடங்களுக்கு 2,700 பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்காக பரீட்சை நடத்தி முடித்திருக்கிறோம்.

இந்த வாரத்துக்குள் அவர்களுக்கு அதன் பெறுபேறுகளை வெளியிட இருக்கிறோம். அவர்களுக்கு கல்வி அமைச்சின் கீழ் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

இதற்கு மேலதிகமாக நீதிமன்ற உத்தரவு தற்போது நீக்கப்பட்டுள்ளதால் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு 9 மாகாணங்களிலும் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தற்போது நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய பட்டதாரிகள் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுப்போம்."– என்றார்.

## யாழ்.,மட்டு.,திருமலை ஆஸ்பத்திரிகள் உட்பட

# 10 வைத்தியசாலைகளில் இன்று பணிப்புறக்கணிப்பு



நாடளாவிய ரீதியில் 10 வைத்தியசாலைகளில் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இலங்கை தேசிய வைத்தியசாலை, கராபிட்டிய, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, பேராதனை ஆகிய போதனா வைத்தியசாலைகள், கேகாலை, பொலன்னறுவை ஆகிய பொது வைத்தியசாலைகள் மற்றும் மன்னார் ஆதார வைத்தியசாலை என்பவற்றில் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் குறிப்பிட்டுள்ளார்.

# 500 பொலிஸாரைச் சேவையில் இணைப்பதற்கான வர்த்தமானி

போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்கு எதிரான வேலைத்திட்டத்துடன் இணைந்து 100 உப பொலிஸ் பரிசோதகர்கள் உட்பட 500 அதிகாரிகளைப் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, 100 பொலிஸ் பரிசோதகர்கள், 370 கான்ஸ்டபிள்கள், 30 கான்ஸ்டபிள் சாரதிகள் பணியில் அமர்த்தப்படவுள்ளனர்.

நேர்காணலில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள் என்றும், ஒரு பொலிஸ் பரிசோதகருக்கு ஒரு வருட பயிற்சிக் காலம் மற்றும் கான்ஸ்டபிள்களுக்கு சுமார் 8 மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சபாநாயகரைச் சந்தித்தார் ஐ.நா. ஒருங்கிணைப்பாளர்

ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆன்ட்ரே பிராஞ்ச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள், நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்படவுள்ள சட்டமூலங்கள், நாடாளுமன்ற அபிவிருத்தி தொடர்பான செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் நாடாளுமன்ற முறைமை தொடர்பில் இதன்போது சுமுகமான கலந்துரையாடல் இடம்பெற்றது.



அத்துடன், நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளேவை இதற்கு முன்னர் சந்தித்தேன் என குறிப்பிட்ட அவர், நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பில் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

மேலும், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவுடனும் மார்க் ஆன்ட்ரே பிராஞ்ச் கலந்துரையாடல் நடத்தினார்.

இதன்போது நாடாளுமன்றக் குழு முறைமை மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு இளைஞர் பிரதிநிகளை இணைத்துக்கொள்ளல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், சட்டவாக்க செயன்முறையில் குழு முறைமை ஊடாக சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் மற்றும் நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதன்போது செயலாளர் நாயகம் விளக்கமளித்தார்.

மேலும், தேர்தல் காலங்களில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாடாளுமன்ற செயற்பாடுகளுக்குத் தேவையான ஆதரவைத் தொடர்ந்தும் வழங்குவோம் என்றும் மார்க் ஆன்ட்ரே பிராஞ்ச் உறுதியளித்தார்.







# நெருக்கடியைத் தீர்க்கப் பொருத்தமான தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பது உறுதியாகியுள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

**“நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் திறமையான மற்றும் பொருத்தமான தலைவர் என்பதை இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் உறுதிப்படுத்துகிறது. எனவே, எதிர்காலத்தில் அவரது தலைமை நாட்டுக்குத் தேவை,” - இவ்வாறு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர், அதற்காக சுமார் 04 லட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

அதன்படி, 24 லட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கும் பணி நிறைவு செய்யப்பட உள்ளது. ஆனால் கடந்த மே மாதம் முதல் அஸ்வெசும கொடுப்பனவு கோரி விண்ணப்பித்த 34 லட்சம் பேர் குறித்து மீண்டும் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்பதைக் கூற வேண்டும்.

மேலும், புதிதாக சமர்ப்பிக்கப்படும் 04 லட்சம் விண்ணப்பங்கள் குறித்தும் முழுமையான கணக்கெடுப்பு நடத்தப்படும். இந்த கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை மேலும் வலுப்படுத்த நாங்கள் அவ்வாறு செய்கிறோம்.

24 லட்சம் பயனாளிகளைத் தேர்வு செய்த பிறகு, அவர்கள் தொடர்பில் தொடர்ந்து மீளாய்வு செய்ய எதிர்பார்க்கிறோம். அஸ்வெசும மூலம் வழங்கப்பட்ட பணத்தை எதற்காக செலவு செய்தார்கள் என்றும் இது எதிர்காலத்தில் வலுவூட்டும் திட்டத்திற்கு எந்த அளவிற்கு பங்களிக்கிறது மற்றும் இதன் ஊடாக அவர்களுக்கு என்ன பலன் கிடைத்தது என்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்படவுள்ளது.

தொடர்ந்து 6 காலாண்டுகளாக எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் இருந்த நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வர நாங்கள் உழைத்தோம். 2023 ஆம் ஆண்டின் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சியடையத் தொடங்கியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் இணைந்து சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நிதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களுடன் கைகோர்த்து செயற்பட முடியுமான நிதி ஒழுக்கத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை நகர்த்தியதன் காரணமாகவே இந்த நிலையை அடைய முடிந்தது. அதன்போது மக்களுக்கு சிரமங்கள் இருந்தாலும், தற்போது அந்த சிரமங்கள் படிப்படியாக குறைந்து வருகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் பணவீக்கம் 0.9 வீதத்தினால் குறைந்துள்ளது. ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளது. அதன் பலன்களை நுகர்வோருக்கு வழங்கத் தேவையான பின்னணி உருவாகி வருகிறது. இன்றைய நிலைவரப்படி, விலைகள் நிலையாக உள்ளன.

பொருளாதாரம் தொடர்பாக, பல்வேறு நபர்கள் சில விடயங்களைக் குறிப்பிட்டு, பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால் அவை நியாயமானவை அல்ல என்பது நாட்டு மக்களுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய தலைமைத்துவத்தைப் பாராட்ட வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மிகவும் திறமையான மற்றும் பொருத்தமான தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் உறுதிப்படுத்துகிறது. பொருளாதார நெருக்கடியை மிகவும் திறமையாகச் சமாளித்தார். எனவே, அவரது தலைமை தொடர்ந்தும் நாட்டுக்குத் தேவை.

நாடு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பார்க்கும்போது, நாட்டை யார் வேண்டுமானாலும் ஆளலாம் என்று சிலர் ஆசைப்படுகிறார்கள். ஆனால் அது தவறான எண்ணம் என்பதைக் கூற வேண்டும். இப்போது நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியிருப்பதால் சிலர் இப்படி நம்பலாம். ஆனால் அப்படி ஒரு நிலை இதுவரை இல்லை. தற்போதைய ஸ்திரத்தன்மை மிகச் சிறந்த முகாமைத்துவம், நேரடி முடிவெடுத்தல் மற்றும் சர்வதேச நம்பிக்கையைப் பெறுவதன் மூலம் அடையப்பட்டுள்ளது.

ஆனால் அது யாராலும் செய்யக் கூடிய காரியம் அல்ல. தற்போதைய திட்டத்தைத் தொடர்ந்தால், 2024 ஆம் ஆண்டில் 2 வீதத்துக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்ற வலுவான நம்பிக்கை உள்ளது. மேலும், பணமாற்று விகிதம் வலுவாக இருந்தும், பணவீக்கம் 70 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைந்தாலும், விலை குறைப்பின் பலன் கிடைக்கவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கறுப்புச் சந்தை விலையைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாததால் இது நடந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். இதன் அடிப்படையில் அடுத்த வாரம் முதல் வாரந்தோறும் மொத்த விற்பனை விலையை பொதுமக்களுக்கு அறிவிக்க வர்த்தக அமைச்சர் முடிவு செய்துள்ளார். அதன் பிறகு சில்லறை விலைகள் குறித்து மக்கள் புரிந்து கொள்ள முடியும்.

மேலும், கடன் மறுசீரமைப்பு திட்டம் இன்று பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான இரண்டாவது மறுஆய்வு இரண்டு வாரங்களுக்கு முன்பு முடிந்தது. தற்போது பணிக்குழாம் மட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இது மூன்றாவது தவணையைப் பெறுவதற்கு பெரிதும் ஆதரவளிக்கும்.” – என்றார்.

# பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் தற்போது பரிசீலிக்கவே முடியாது!

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு

பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் தற்போது பரிசீலிக்க முடியாது என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தனியார் பஸ்கள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. லங்கா சுப்பர் டீஸலின் விலைகள் மேலும் குறையும் பட்சத்தில் இதனை பஸ்கள் பயன்படுத்துவதற்கு முடியும்.

எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட்ட போதிலும், தற்போதைய டீஸல் விலை அதிகரிப்பு 4 வீதத்தைக் கடக்கவில்லை.

லங்கா ஓட்டோ டீஸல் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், பஸ் பயண கட்டணம் அதிகரிக்கப்படவில்லை.” –என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உண்டு.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கடைசியில் உயர்நீதிமன்றத்திடம் முறையீடு செய்தி ருக்கின்றார்கள் – அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் வடிவத்தில்.

உயர்நீதிமன்றமும் விடயத்தின் முக்கி யத்துவத்தையும் ஆழத்தையும் புரிந்து இருப்பதாகத் தெரிகின்றது. பொது அமைப் பின் பிரதிநிதிகளான மனுதாரர்களை விட, உயர் நீதிமன்றம் இது விடயத்தில் அதிக கரிசனை கொண்டிருப்பதாக சம்பந்தப் பட்ட சட்டத்தரணி ஒருவர் கூறினார்.

மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. பூர்வாங்க விசாரணைகளைக் கடந்த வாரம் நடத்திய உயர் நீதிமன் றம் விடயத்தை நீண்ட காலம் ஒத்தி வைக்க விடவில்லை. இன்று பிற்பகல் 1:30 மணிக்கு விசேடமாக மன்று கூடுகின்றது – இவ்விடயத்தை ஆராய்ந்து முடிவு எடுப் பதற்காக.

நீதியரசர் யஸந்த கோட்டாகொட, ஜனக் டி சில்வா, அர்ஜுன ஒபயசேகர ஆகி யோரைக் கொண்ட ஆயமே இந்த விட யத்தை ஆராய்கின்றது. துணிச்ச லான தீர்ப்புகளை தந்த நீதியரசர்களைக் கொண்ட குழாம் இது.

வரும் வெள்ளிக்கிழமையுடன் புதுவருடத்தை ஒட்டி, உயர் நீதிமன்றத் திற்கு இரண்டு வாரங்கள் விடுமுறை. அதற்கு முன்னர், இப்படிக் கண்மூடித்த னமாக மதுபானசாலை உரிமங்களை அள்ளி வீசித் தானம் நடத்தும் அரசியல் தலைமைகளுக்கு ஒரு குட்டு வைக்கும் விதத்தில் நீதிமன்ற உத்தரவு இடைக் காலத் தடை வடிவத்தில் வந்தாலும் ஆச் சரியப்படுவதற்கு இல்லை. அடுத்து வரும் நாள்களில் விடயம் தெளிவாகும். பார்த் திருப்போம்.

## 8 சந்தேக நபர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

45 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட அதி காரிகள் பயணித்த கலால் திணைக்களத் துக்குச் சொந்தமான வான் ஒன்றும் கைப் பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

## கை, கால்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற ஆயுர்வேத சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற் றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப் பிட்டுள்ள கருத்துக்கள் பாரதூரமானவை. குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்ன ணியில்இந்தியாஇருப்பதாகஅவர்குறிப்பிட் டுள்ளமை அவதானத்துக்குரியது.

முன்னாள் ஜனாதிபதியின் கருத்துக்கு அமைய உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குல் சம்பவத்தின் பின்னணியில் இந்தியா இருக்கின்றதெனில் குண்டுத் தாக்குதலை நடத்த இந்தியாவுக்கு உதவி செய்தது யார் என்பதையும் அவர் பகி ரங்கப்படுத்த வேண்டும். மைத்திரிபால சிறிசேனவை எவரோவொருவர் இயக்கு வது தெளிவாகத் தெரிகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக் குதல் சம்பவம் தொடர்பான விசாரணை களை ஸ்கொட்லன்ட் யாட் பொலிஸ்க்குப் பொறுப்பாகுவதாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகுவற்கு முன்னர் குறிப்பிட் டார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதியானதன் பின்னர் ஸ்கொட்லன்ட் யாட் விவகாரத்தை அவர் மறந்து விட்டார்.

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ எதிரணியின் பக்கம் இருக்கும்போது குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடித்தார். நாடாளு மன்றத்துக்குக் கறுப்பு சால்வையுடன் வருகை தந்து தனது எதிர்ப்பை அவர் வெளிப்படுத்தினார். ஆனால், அவர் ஆளும் தரப்புக்குச் சென்று அமைச்சுப் பதவியேற்றதன் பின்னர் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை மறந்து விட்டார்.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் முறை யான விசாரணைகளை மேற்கொண்டு பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்து வது தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது.

மக்கள் வைராக்கியத்துடன் உள்ளார் கள். சட்டத்தின்ஊடாகதண்டனைகிடைக்கா விடின் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார் கள்.” – என்றார்.

## பிரித்தானியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேற்படி இளை ஞன் மைக்கல் நேசக்கரம் அமைப்பின் உறுப்பினர் என்பதுடன், அந்த அமைப் பின் ஊடாக முன்னாள் போராளி கள் உள்ளிட்ட பலருக்கும் பல்வேறு உதவித் திட்டங்களைச் செய்து வந்துள் ளார்.

கடந்த மாதம் 7ஆம் திகதி பிரித்தானி யாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த மேற்படி இளைஞன் வெடுக்கு நாறிமலை ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டு அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்த நிலை யில் தற்போது மாத்தனைப் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த மாத் தளைப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.







# இவ்வருடம் முதல் மூன்று மாதங்களில் 6 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை

(கற்பிட்டி சியாஜ்)

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் நாட்டிற்கு ஆறு லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதன்படி, மார்ச் மாதம் 31ஆம் திகதி நிலைவரப்படி நாட்டிற்கு 635,784 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் முதல் மூன்று மாதங்களில் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 200,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளமையோடு, இது இலங்கைக்கு ஒரு திருப்பு முனையாகவுள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிகையை இந்த மூன்று மாத வருகை அண்மித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA) தரவுகள் சுட்டிகாட்டியுள்ளன.

இந்நிலையில், 2024 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் 208,253 பேரும், பெப்ரவரி மாதத்தில் 218,350 பேரும், மார்ச் மாதத்தில் 209,181 பேரும் வருகை தந்துள்ளானர்.

மார்ச் மாதத்தில் இந்தியாவிலிருந்து 28,218 பேரும், ரஷ்யாவிலிருந்து 25,112 பேரும், ஜேர்மனியில் இருந்து 16,745 பேரும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 16,649 பேரும், சீனாவிலிருந்து 11,220 பேரும் வருகை தந்துள்ளனர்.

இந்த காலகட்டத்தில் பிரான்ஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, போலந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை பதிவாகியுள்ளது.

# மைத்திரி, கருணா, பிள்ளையானைக் கைது செய்து விசாரித்தால் ஈஸ்டர் தாக்குதல் உண்மை வெளிவரும்

## மட்டக்களப்பில் முன்னாள் எம்.பியான யோகேஸ்வரன் தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

ஈஸ்டர் குண்டுதாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, கருணா அம்மான், பிள்ளையான் ஆகியவர்களுக்கிடையே ஏதே ஒன்று மறைந்திருக்கின்றது. ஆகவே இவர்கள் 3 பேரையும் கூட்டாக கைது செய்து விசாரித்தால் இந்த குண்டுதாக்குதல் தொடர்பாக சரியான சூத்திரதாரி யார் என்பதை அறிய முடியும். எனவே இவர்களை உடன் கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கருணா படையணி என்பது வழமையான செயற்பாடு. தேர்தல் நெருங்குகின்றது. தேர்தலுக்கான நாடகம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தைப் பூரண அதிகாரத்துடன் மீட்டுத் தருவதாகக் கூறி, தமிழ் தேசியத்துக்கு வாக்களிக்க இருந்த மக்கள் எல்லாம் தன்பக்கம் திசைதிருப்பி, வாக்குகளை சிதறடிக்க வைத்து அந்த மாவட்டத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதி ஒருவர் வராமல் செய்து, முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்க செய்த பெருமை இவருடையது.

இப்போது அவர் ஒரு செயலணிபோட்டு – குழு போட்டு – செயற்பட வந்துள்ளார். இது தேர்தலுக்காக மேற்கொள்ளும் ஒரு நாடகம். அவரது ஏமாற்று வேலை. எல்லாம் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். எனவே அவர் வடக்கு – கிழக்கை இணைக்கத் தேவையில்லை. அவர் சும்மா இருந்தால் போதும். எங்கள் மக்களுக்கு எதை பெறுவது என்று தெரியும். அதை அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

அதேநேரத்தில் 2019 ம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுதாக்குதல் தொடர்பாக தற்போது பலரின் வாயில் வித்தியாசமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் ஆலோசகராக இருந்து சுவிஸ்நாட்டில் தஞ்சமடைந்துள்ள ஆசாத் மௌலான சனல் 4 ஊடகத்தில் பிள்ளையானைக் குற்றவாளி எனத் தெரிவித்துள்ளார்

ஆனால் பிள்ளையான் இன்று ஈஸ்டர் குண்டு தாக்குதலை வைத்து ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றார்.



இதே நேரத்தில் முன்னா ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன காலத்தில்தான் இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. அவர் அப்போது வாய்திறக்காமல் இருந்து விட்டு, ஜனாதிபதிப் பதவியை இழந்து நீண்ட காலத்தின் பின் தற்போது வாயை திறந்து தனக்கு சூத்திரதாரியை தெரியும் என்று தெரிவித்துள்ளார்.

அது தவிர ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஆசாத் மௌலான பிள்ளையான் தொடர்பாக தெரிவித்துள்ளார். பிள்ளையான் புத்தக வெளியிட்டுள்ளமை தொடர்பாக கருணா அம்மான் கருத்துத் தெரிவித்துள்ளார். எனவே இவர்கள் எல்லோரும் கூட்டாக விசாரிக்கப்படவேண்டும். ஏதோ ஒன்று இவர்களுக்குள் மறைந்திருக்கின்றது.

எனவே இந்தக் கருத்துக்களை வெளியிட்டு குற்றம் சாட்டும் முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, கருணா அம்மான் என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் வி.முரளீதரன், பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் ஆகிய 3 பேரை அரசாங்கம் கைது செய்யது சரியாக விசாரித்தால் இந்தக் குண்டுதாக்குதல் தொடர்பான சரியான சூத்திரதாரி கைது செய்யப்படுவார். அவர் யார் என்பதையும் அறிய முடியும்.

எனவே ஜனபதிபதி விசேட குழு ஒன்றை அமைத்து அவர்களைக் கண்டுபிடித்து , சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் . அதைச் செய்யுமாறு அரசையும் ஜனாதிபதியையும் கோட்டுக் கொள்கின்றேன். – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சஜித் எழுப்பும் கேள்வி

உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று திங்கட்கிழமை எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா விசேட கருத்துரை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்று அரசியல் தலைவர்களால், அரசியல் சுயநலன்களுக்காக எப்படிப் பந்தாடப் படுகின்றது என்பதை அவ்வுரையின் மூலம் உணரமுடியும்.

நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் விசேட உரை ஒன்றை ஆற்றினார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஐந்து வருடங்களாகின்ற போதிலும் அரசாங்கம் எதுவித நடவடிக்கையையும் உருப்படியாக எடுக்கவில்லை.

"ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுக்கள் தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. ஆனால் எதுவித பரிந்துரைகளும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச ஆதரவுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருந்தார்.

"அத்தகைய விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளனவா?" - என்றும் எதிர்கட்சித் தலைவர் வினாத் தொடுத்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸ் உதவியையும் பெறலாம் என்று தாமே ஆலோசனை கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இப்போது அதை அடியோடு மறந்தே போய் விட்டார் போலும். எதிர்கட்சித் தலைவரின் நேற்றைய உரை அதை ஒரு தடவை ஜனாதிபதிக்கு நினைவூட்டியிருக்கும் என்று நம்பலாம்.

"இந்தத் தாக்குதல் விடயம் அமைச்சர்கள் சிலருக்கு நகைச்சுவையாக இருக்கலாம். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவ்வாறில்லை. சஹ்ரானுடன் அதிக தடவை தொலைபேசி உரையாடல் மேற்கொண்ட புலனாய்வுத் துறை அதிகாரி யார் எனத் தெரிந்திருதாலும் மேலதிக விசாரணைகள் இடம்பெறவில்லை.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மூலம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே அதிக பயனடைந்தார். அவர் பதவியேற்றதன் பின்னர், அதற்கு முன்பு அச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட 31 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

"தாக்குதல் இடம்பெறவுள்ளதாக இந்தியப் புலனாய்வு பிரிவால் தகவல்கள் வழங்கப்பட்டன. அத் தகவல்கள் விடுக்கப்பட்ட திகதிகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொண்டவர்கள் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருக்கின்றார்.

"விசாரணைகளின் மூலம் பிரதான சூத்திரதாரி யார் என எப்போது வெளிப்படுத்துவீர்கள்? இந்த அனைத்துக் கேள்விகளுக்கும் இன்றே பதில் தேவைப் படுகிறது." - என சஜித் பிரேமதாஸ நேற்று வினாத் தொடுத்திருந்தார்.

இவை, ஆக எதிர்க்கட்சித் தலைவருடைய அல்லது அவர் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற எதிர்க்கட்சிகளினுடைய கேள்விகள் அல்ல.

ஒட்டுமொத்த நாட்டு மக்களின் - குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தோரின் உறவினர்கள் மற்றும் பாதிக்கபட்டோரின் - விடை தேடும் கேள்விகளாக இவை உள்ளன.

இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக நீதி, நியாயமான - உண்மையான - ஒழுங்கு முறையான - பக்கச் சார்பற்ற - சட்ட முறையான - புலன் விசாரணைகளோ, சட்ட நடவடிக்கைகளோ எடுக்கப்படவே இல்லை என்பதுதான் இந்த நாட்டு மக்களின் பெரும் அதிருப்தியாக, ஏமாற்றமாக, விசனமாக நீடிக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னணியில் புதைந்து கிடக்கும் மர்மங்களை அம்பலப்படுத்துவதில் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகார பீடம் நேர்மையான - உண்மையான - பங்களிப்பையோ ஈடுபாட்டையோ வழங்கவே இல்லை, கரவு மனதுடனேயே அது செயல்படுகின்றது என்ற எண்ணப் பாங்கே இந்தக் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட தரப்புகளின் மனக் கருத்தாக இருக்கின்றது.

இந்த நிலைமை தொடரும் சூழலில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினத்தவரின் - குறிப்பாக கிறிஸ்தவர்களின் - வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைப்பது பெரும்பாலும் துர்லபமே.

# துருக்கி உள்ளூராட்சி தேர்தலில் ஏர்டோகனுக்கு பின்னடைவு








துருக்கியில் இரண்டு தசாப்தங்களாக ஆட்சிபுரிந்த ஜனாதிபதி டயிப் ஏர்டோகன் தலைமையிலான அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலில் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

துருக்கியில் மேயர் உள்ளிட்ட பதவிகளுக்கான உள்ளூராட்சி தேர்தல் வாக்குப்பதிவு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிலையில் சுமார் 60 சதவீத வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் இஸ்தான்புல் நகரில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட இமாமோக்லு முன்னிலைவகிக்கின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்தான்புல் மற்றும் அங்காரா ஆகிய நகரங்களில் குடியரசுக்கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 81 மாகாணங்களில் 36 இடங்களில் குடியரசுக்கட்சி முன்னிலைவகிப்பதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி 15ஆசனங்களை கைப்பற்றியுள்ள நிலையில் ஜனாதிபதி டயிப் ஏர்டோகன் தேர்தலில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளார். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஆட்சிபுரிந்த டயிப்ஏர்டோகன் எதிர்கொண்ட பாரிய தோல்வியாக இது கருதப்படுகின்றது.

கடந்த 21 வருடங்களுக்கு முன்னதாக டயிப் ஏர்டோகன் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வரலாற்றில் முதற்தடவையாக அவரது கட்சி தோல்வியை தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்படி சுமார் ஒரு மில்லியன் வாக்குகளின் அடிப்படையில் குடியரசுக்கட்சி வெற்றியை பதிவு செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

துருக்கியின் ஜனாதிபதி டயிப்ஏர்டோகன் கடந்த 1994 ஆம் ஆண்டு தனது 70 ஆவது வயதில இஸ்தானபுல் மேயர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றிபெற்றதன் ஊடாக அரசியலுக்குள் பிரவேசித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காசா போர் நிறுத்தத்திற்கு போப் பிரான்சிஸ் அழைப்பு





உடனடியாக போரை நிறுத்தி அனைத்து இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என பொப் பிரான்சிஸ் காசாவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு பண்டிகை விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

“காசாவிற்கு மனிதாபிமான ரீதியிலான உதவிக்கு அணுகலை உறுதி செய்ய வேண்டும்.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி கைப்பற்றப்பட்ட பணயக்கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

மேலும், உடனடியாக போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுக்கிறேன். இதனால், குழந்தைகளின் கண்களில் நாம் எவ்வளவு துன்பங்களை காண்கிறோம்.

அந்த போர்க்களங்களில் குழந்தைகள் புன்னகைக்க மறந்துவிட்டார்கள். இது வருத்தத்திற்குரிய விடயமாகும். எனவே போரை நிறுத்துமாறு நான் காசாவிற்கு அழைப்பு விடுக்கின்றேன்.” என தெரிவித்துள்ளார்.

# கச்சதீவை மீட்க மத்திய அரசு நடவடிக்கை ஆவணங்களை காட்டினார் அண்ணாமலை



"இலங்கைக்கு கச்சத்தீவு வழங்கப்பட்ட விவகாரத்தில் தி.மு.க. அரசுக்கும் முக்கியப் பங்கு உள்ளது."

– இவ்வாறு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணங்களைக் காட்டி பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

கோவை மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளரும், அக்கட்சியின் மாநிலத் தலைவருமான அண்ணாமலை அவிநாசி சாலை சிட்ரா பகுதி அருகே கட்சியின் தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இதைத்தொடர்ந்து,கச்சத்தீவுவிவகாரம்தொடர்பாததகவல்அறியும்உரிமைச்சட்டத்தின்கீழ்பெறப்பட்டஆவணங்களைக்காட்டியபடி செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"டில்லியில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்ட விவகாரம் குறித்த விரிவான தகவல்களை செய்தியாளர்களிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இதுவரை கச்சத்தீவு விவகாரத்தில் தி.மு.கவினர் பொய்யான தகவல்களையே கூறியுள்ளனர். தங்களுக்கு தெரியாமலே கச்சத்தீவு கொடுக்கப்பட்டது, இதைக் கண்டித்து கண்டனப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. நாடாளுமன்றத்தில் தி.மு.கவின் எம்.பிக்கள் வெளிநடப்பு செய்தனர் எனவும் தெரிவித்துள்ளனர். ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்டு வெளியிடப்பட்டுள்ள ஆவணங்களில் தமிழக மக்களை தி.மு.கவினர் ஏமாற்றியுள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது.

கச்சதீவை தாரைவார்த்த விவகாரத்தில் இதுவரை காங்கிரஸ் கட்சியை மட்டுமே தி.மு.க. குறை கூறிவந்துள்ளது. இதில் தி.மு.கவுக்கும் முக்கிய பங்கு உள்ளது என்பதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் நாங்கள் வெளிக் கொண்டு வந்துள்ளோம்.

இச்சம்பவத்தின்போது முதல்வராக இருந்த கருணாநிதிக்கு தெரிந்தே தான் கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டுள்ளது. எனவே, காங்கிரஸ் மற்றும் தி.மு.க, பொதுமக்கள் மத்தியில் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின் இந்தியாவின் எந்த ஒரு பகுதியும் மற்ற நாடுகளுக்கு விட்டுக் கொடுக்கப்படவில்லை. 1974 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் திகதி அன்றைய தமிழக முதல்வர் கருணாநிதியும், வெளியுறவுத் துறை அமைச்சரும் சந்தித்து பேசிய குறிப்புகள் வெளிவந்துள்ளன.

ஒன்பது பக்கங்கள் கொண்ட அந்தக் குறிப்பில் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் கச்சதீவை கொடுப்பது குறித்து பேசலாம். இப்போது வேண்டாம் என கருணாநிதி கேட்டுள்ளார். பின் கச்சத்தீவை இலங்கையிடம் வழங்குவதற்கு கருணாநிதி சம்மதம் தெரிவித்தார். அத்துடன், சிறிய அளவு போராட்டங்கள் செய்வதாகவும் கூறி 21 முறை கடிதம் எழுதி நாடகமாடியுள்ளார். கச்சதீவை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசும், வெளியுறவுத் துறை அமைச்சகமும் ஆராய்ந்து வருகின்றன. பிரதமர் மோடி சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார்.

'முத்ரா' கடனுதவி தொழில்முனைவோருக்கு அதிகளவு வழங்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டம் சிறந்த பலன் பெற்றுள்ளது. போக்குவரத்து நெருக்கடி காரணமாக கோவை – பெங்களூர் இரவு நேர ரயில் உள்ளிட்டவை வழங்க முடியவில்லை. கோவை – டுபாய் இடையே விமான சேவை தொடங்கவும் தற்போதைக்கு வாய்ப்பு இல்லை. கோவை மக்கள் மத்தியில் பா.ஜ.கவுக்கு சிறப்பான வரவேற்பு உள்ளதை பிரச்சாரத்தில் காண முடிகிறது." – என்றார்.

# மக்களை திசை திருப்பும் பா.ஜ.க. கனிமொழி எம்.பி குற்றச்சாட்டு

"ஒருபக்கம் பிரதமருக்கு திடீரென்று தமிழ்ப் பாசம் வந்துவிட்டது. மறுபக்கம் அண்ணாமலையோ தமிழ் மக்களின் இந்தி எதிர்ப்பு போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகிறார். அந்தப் போராட்டத்தைப் பிஞ்சு போன செருப்புக்குச் சமம் என்று கூறுகிறார்."

– இவ்வாறு கனிமொழி எம்.பி குற்றஞ்சாட்டியுள்ளார்.

திருநெல்வேலி மக்களவை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸை ஆதரித்து வள்ளியூரில் கனிமொழி எம்.பி.பேசுகையில்,

"வரக்கூடிய தேர்தல் என்பது எப்போதும் நாம் சந்திக்கின்ற தேர்தல் போல் இல்லை. இது மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டம் என்று எண்ணக்கூடிய அளவில் ஒரு தேர்தல். ஏனென்றால் நிச்சயமாக இந்த தேர்தலுக்குப் பிறகு மத்தியில் பா,ஜ,க, மீண்டும் வராது. ஆனால் ஒரு விபத்து போன்று அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் என்றால், இதுதான் இந்தியாவில் நடைபெறும் கடைசி தேர்தல் என்பது நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அதன் பிறகு யாரும் வந்து ஓட்டு கேட்க மாட்டார்கள் சர்வாதிகாரம் மட்டும்தான் இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் இந்த நாட்டை மீட்டெடுக்கக் கூடிய தேர்தல் இந்த தேர்தல், நம்முடைய உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய தேர்தல் இந்த தேர்தல், சாமானிய மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கக்கூடிய தேர்தல் இந்த தேர்தல், மீனவர்களுடைய உரிமைகள், விவசாய மக்களுடைய உரிமைகள் இங்கே இருக்கக் கூடிய சகோதரர்களின் உரிமைகள் இதையெல்லாம் மீட்டெடுக்கக்கூடிய தேர்தல் இந்த தேர்தல் என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பிரதமர் தமிழ்நாட்டில் வெள்ளம் வந்த போது வரவில்லை. மிகப்பெரிய பாதிப்பு தூத்துக்குடி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்திலும் வந்தபோது எட்டிக் கூட பார்க்கவில்லை. நிதி அமைச்சரை அனுப்பினார். ஆனால் ஒரு ரூபாய் கூட வரவில்லை. அந்த நிதி அமைச்சரைக் கூட்டிக்கொண்டு எல்லா இடங்களையும் காண்பித்தது நமது நிதி அமைச்சர். இவ்வளவோ கஷ்டங்களைக் காண்பித்த பிறகும் அவர்கள் நிதி கொடுப்பார்கள் என்று பார்த்தால், நிவாரணம் தருவார்கள் என்று நினைத்தால் ஒன்றும் வரவில்லை.

இந்த பக்கம் பிரதமர் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. ஆனால்



தேர்தல் வந்த பிறகு பிரதமர் தமிழ்நாட்டுக்குத் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறார். ஆனால் எத்தனை முறை வந்தாலும் ஒன்றும் ஓட்டு தேறாது. மூன்றாவது இடத்திற்கு முயற்சி செய்வோம் என்று பிரதமர் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறார். நோட்டாக்கு கீழே போய் தான் பழக்கம். இந்த தடவையாவது மூன்றாம் இடத்துக்கு வரலாம் என்று முயற்சி செய்கிறார்கள்.தேர்தல் வந்தவுடன் தமிழ் மொழியின் மேல் பாசம் வந்துவிட்டது பிரதமருக்கு. திருக்குறள் சொல்லுவார். ஆனால் அது திருக்குறளா என்று நாம் கண்டுபிடிக்க முடியாது.

தமிழ் தான் மிகவும் பழமையான மொழி என்று பிரதமர் கண்டுபிடித்துள்ளார். திடீரென்று பாசம் வந்துவிட்டது எனக்குத் தமிழ் தெரியவில்லை என்று வருத்தப்படுகிறார். நான் தமிழ்நாட்டில் பிறக்கவில்லை என்ற வருத்தப்படுகிறார். நீங்கள் எங்களையெல்லாம் இந்தி கற்றுக்கொள் என்று சொல்கிறீர்கள். அதே மாதிரி நீங்களும் தமிழை கற்றுக் கொள்ளுங்கள். நம்முடைய முதல்வரிடம் சொன்னால் உடனே ஒரு நல்ல ஆசிரியர் பார்த்து நிச்சயமாக டில்லிக்கு அனுப்பி வைப்பார். இதன் பிறகு நீங்கள் டில்லியில் இருக்க மாட்டீர்கள், நீங்கள் எங்கிருந்தாலும் தமிழ் கற்றுக் கொடுப்பது பற்றி எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. நிச்சயமாகத் தமிழ் கற்றுக் கொள்ளலாம்.

ஆனால், இந்தப் பக்கம் பிரதமருக்கு திடீரென்று தமிழ் பாசம் வந்துவிட்டது. அந்தப் பக்கம் அண்ணாமலை தமிழ் மக்களின் இந்தி எதிர்ப்பு போராட்டத்தைக் கொச்சைப்படுத்திப் பேசி உள்ளார். அந்தப் போராட்டத்தைப் பிஞ்சு போன செருப்புக்குச் சமம் என்று கூறுகிறார் என்று அவ்வளவு வாய்த் துடுக்கு, துணிச்சலாக பேசுகிறார்." – என்றார்.



# காஸா சிறுவர் நிதியத்திற்கு அரசிடமிருந்து 1 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை

காஸா பகுதியில் இடம்பெறும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையை ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ முகவர் நிறுவனத்தின் ஊடாக பாலஸ்தீன அரசாங்கத்திடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதற்கான காசோலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹேர் ஹம்தல்லாஹ் ஸைதிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற காசோலை கையளிக்கும் நிகழ்வில், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் இலங்கைக்கான பலஸ்தீன தூதரக சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையின் பேரில் காஸா பகுதியில் இடம்பெற்ற மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு பெருமளவிலான நன்கொடையாளர்கள் ஏற்கனவே நிதியுதவி அளித்திருந்தனர்.

அத்துடன், இந்த வருடம் இப்தார் நிகழ்வுகளை நடாத்துவதற்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட நிதியை இந்த நிதியத்துக்கு வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, முதற்கட்டமாக காஸா சிறுவர் நிதியத்திற்காக வழங்கப்பட்ட ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் பலஸ்தீன அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

அத்துடன், “காஸா சிறுவர் நிதியத்திற்கு“ பங்களிக்குமாறு நன்கொடையாளர்களிடம் ஜனாதிபதி அலுவலகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி கிடைத்துள்ளதுடன், அந்த நிதி எதிர்வரும் நாள்களில் பலஸ்தீன அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.

நன்கொடையாளர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மாத்திரமே இந்த நிதியத்திற்கு பங்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்குப் பங்களிக்க விரும்புவோர் தமது நன்கொடைகளை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையின் 7040016 எனும் கணக்கு இலக்கத்தில் வைப்பிலிட முடியும். அதற்கான பற்றுச் சீட்டை 077-9730396 எனும் எண்ணுக்கு வட்ஸ்அப் ஊடாக அனுப்புமாறு ஜனாதிபதி அலுவலகம் கோரியுள்ளது.










# தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நேற்றுடன் 45 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தது

(அஷ்ரப் ஏ சமத்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நேற்றுடன் 45 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதையிட்டு அதன் வருடாந்த விழாவை நேற்றுப் பெருமையுடன் தலைமைக் காரியாலயத்திலும் மாவட்டக் காரியலயங்களிலும் கொண்டாடியது.

இந் நிகழ்வு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜிவ் சூரியாராச்சி தலைமையில் அதிகார சபையின் தலைமைக் அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ் அதிகார சபை 1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதிகார சபை நாடு முழுவதும் வீடுகள் அற்ற மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தல், வீடமைப்புக் கடன் வழங்குதல் ஆகியவற்றுக்குப் பங்களித்த மையுடன் நகர, கிராமிய பிரதேசங்களில் கடந்த காலத்தில் பல்வேறு வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களையும் அமுல்படுத்தி வந்ததுள்ளது. இதுவரை 20 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த அதிகார சபையின் ஊடாக நன்மையடைந்துள்ளன.

கடந்த காலங்களில் ஒரு லட்சம் வீடமைப்புத் திட்டம், 10 லட்சம் வீடமைப்புத் திட்டம், மாதிரிக் கிராமங்கள், செவன வீடமைப்பு, தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள், "நமக்கு ஒரு வீடு நாட்டுக்கு ஒரு வீடு" போன்ற பல்வேறு வீடமைப்புத் திட்டங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காலத்தில் இந் நிறுவனம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

இந்நிறுவனத்தை கடந்த 45 வருட காலமாகக் கட்டிக் காத்துத் திறம்பட கொண்டு செல்லும் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ சபைக்கும் வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் நனறியறிதலைத் தெரிவித்தார். அத்துடன் நாடளாவிய ரீதியில் வீடமைப்புக் கடன் திட்டத்திங்களை வழங்கி வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களையும் மாவட்டம்தோறும் முன்னெடுத்துச் செல்வதாகவும் அர்ப்பணிப்புடம் தொண்டாற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் உப தலைவர் லக்ஷ்மன் குணவர்த்தன, பணிப்பாளர் சபை உறுப்பிணர்கள், பொது முகாமையாளர் கே.ஏ ஜனாக்க மற்றும் தலைமைக் காரியாலயத்தின் சகல ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் 45 வருடப் பூர்த்தியை முன்னிட்டு கேக் வெட்டி ஊழியர்கள் பரிமாறினர்.



# பொலிஸ், புலனாய்வுப் பிரிவு, இராணுவம் பாடசாலை மட்ட நிகழ்வுகளில் தலையீடு

## வன்மையாகக் கண்டிக்கிறது இலங்கை ஆசிரியர் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடவும் முடிவு

பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிஸாரினதும் அரச புலனாய்வாளரினதும் இராணுவத்தினரினதும் தலையீடுகள் மற்றும் விசாரணை செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் தீலீசன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில் –

பாடசாலைகளில் நடைபெற்றுவரும் இல்ல விளையாட்டு நிகழ்வுகளில் அலங்கரிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக – குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும், அரச புலனாய்வாளர்களினதும் அச்சுறுத்தல் இடம்பெற்றுவருவது தனிமனித சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரங்களை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்களாகும்.

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION

இலங்கை அரசின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் – கலை ரீதியாகவும் – குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் – சமூகம் சார் பிரக்ஞைகளை வெளிப்படுத்தும் போது, அதனை அரச இயந்திரங்களால் நசுக்கும் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்க முடியாது.

இதற்குக் கல்வித் திணைக்களங்களும் துணைபோகுமானால், கல்விக்குள் இராணுவ மற்றும் பொலிஸ் தலையீடுகளை ஆதரிக்கும் செயற்பாடுகளாகவே இவை அமையும்.

அண்மையில் நடைபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டியின், இல்ல அலங்காரங்களில் மாணவர்கள் வெளிப்படுத்திய வெளிப்பாடுகள், இலங்கை அரசமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரத்துக்கு உட்பட்டவையாகும்.

இந்த விடயங்களில் பொலிஸாரோடு இணைந்து வடமாகாண கல்வி அமைச்சும் தலையீடு செய்வதென்பது மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு எனபதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும்.

இவ்விடயம் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யவுள்ளோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொருத்தமான விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது.

# புரவுன்லோ தோட்ட முத்தேர் பவனி



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள புரவுன்லோ தோட்ட முத்துமாரியம்மன் ஆலயம் வருடாந்த முத்தேர் பவனி சனியன்று இடம் பெற்றது.

வருடாந்த உற்சவம் 07 தினங்கள் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் கொடி ஏற்றம்,கரகம் பாலித்தல்,கரகம், காவடி,பறவைக் காவடி, தீ மிதிப்பு, அன்னதானம், தேர் பவனி, மாவிளக்கு பூஜை, மஞ்சள் நீர், காவல் தெய்வம் வைரவர் பூஜையுடன் திருவிழா நேற்று முந்தினம் இரவு 8 மணிக்கு நிறைவு பெற்றது.

# கல்முனை வடக்கில் தமிழ் மக்கள் நடத்தும் போராட்டத்துக்காக சிறீதரன் எம்.பி. குரல்!

## நேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பினார்

கல்முனை வடக்கில் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் பிரதேச செயலகத்தை மூடுவதற்கும் தரம் குறைப்பதற்கும் ஒரு சிலர் முயற்சித்து வருகின்றனர் என்று தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆயுர்வேத சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.




கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுடைய உரிமைக்கான மக்கள் போராட்டம் 7ஆவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

தீச்சுடர் ஏந்தி, மக்கள் எழுச்சியுடன் மெழுகுவர்த்தி ஏற்றி, உரிமை கோஷம் எழுப்பியபடி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொது மக்களின் கோரிக்கைகள் வருமாறு:-

01.கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தின் உப அலுவலகமொன்றாகத் தரம் குறைப்பதற்கான சட்ட விரோத சூழ்ச்சிகள் நிறுத்தப்பட வேண்டும்.

02.கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப அலுவலகமொன்றாக கருதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் உடனடியாக இரத்துச் செய்யப்படவேண்டும்.

03.கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் தனது அதிகாரங்களை கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குள் சட்டவிரோதமாக பிரயோகித்து வருவது நிறுத்தப்பட வேண்டும்.

04.1993 ஆம் ஆண்டு ஜுலை மாத 28 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சுயாதீன தொழிற்பாடு உறுப்படுத்தப்பட வேண்டும்.

05.கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைகளை வர்த்தமானிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நிலவி வரும் இப்பிரச்சினைக்கு அரசியலுக்கு அப்பாற் சென்று நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும்.

தமிழர்களுடைய பிரதேசம் என்பதாலும், சுயமான சுதேசிய தமிழ் மொழியை பேசக்கூடியவர்கள் என்பதாலும்தான் அந்தப் பிரதேசத்தை பறிக்க முற்படுகிறார்களோ என்ற சந்தேகம் எழுகின்றது.

பாண்டிருப்பு, கல்முனை மற்றும் பெரியநிலாவனை உள்ளிட்ட பல பிரதேசங்கள் தனித்துவமாக இயங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் உள்ள நிலையில் வர்த்தமானி அறிவித்தலினூடாக இயங்க விடாமல் தடுப்பது மனித உரிமை மீறல் செயற்பாடு - என சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுடைய மக்கள் உரிமை போராட்டத்திற்கான தமது ஆதரவையும் இதன்போது அவர் பதிவு செய்தார்.

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலும் தேவாலய உண்டியலில் கைவரிசை

## தாண்டவன்வெளி மாதா தேவாலயத்தில்




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் தேவாலயங்களில் ஈஸ்டர் தின வழிபாடுகள் பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்ற போதிலும் நகரிலுள்ள தாண்டவன்வெளி மாதா தேவாலயத்தின் உள்ள உண்டியலை உடைத்து அங்கிருந்த பணத்தைத் திருடிச் சென்ற சம்பவம் சனிக்கிழமை நள்ளிரவு இடம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் தண்டவன்வெளியில் அமைந்துள்ள இந்தத் தேவாலயத்தில் சம்பவதினமான சனிக்கிழமை ஈஸ்டர் விசேட ஆராதனை நள்ளிரவு இடம்பெற்றுள்ள நிலையில் அங்கு பொலிஸார் பலத்த பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் விசேட ஆராதனை நள்ளிரவு 12 மணிக்கு முடிவுற்ற நிலையில் அங்கிருந்து பொலிஸார் வெளியேறியுள்ளனர்.

தேவாலயத்தின் அருகில் வீதியோரத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதா சிலைக்கு முன்பாக அமைந்துள்ள இரும்பிலான உண்டியலை உடைத்து அங்கிருந்த பணம் திருடிச் செல்லப்பட்டுள்ளது என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கை நாளை ஆரம்பம்

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கமைய, கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்பாடுகளை, வலயக் கல்வி பணிமனைகளூடாக நாளை முதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு, பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஊடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வைத் திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். இவர்களில் தேவைப்படும் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும் மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலையினை கருத்திற் கொண்டு, மாணவர்களின் பாடசாலை கற்றல் நிறைவு பெறும்வரை தொடர்ச்சியாக இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.





இந்த செயற்றிட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது, ஆளுநரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, மாகாண கல்வி மற்றும் சுகாதார அமைச்சுகள் இணைந்து இதில் பங்காற்றவுள்ளன. யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் கண் வைத்திய நிபுணர் முத்துசாமி மலரவனின் வழிநடத்தலின் கீழ் 06 மாத காலத்திற்குள் இந்த செயற்றிட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படும் இந்த விசேட திட்டத்திற்கு, மலேசியா நாட்டை சேர்ந்த அலாக்கா என்ற நிறுவனம் நிதி அனுசரணையை வழங்குவதுடன், யுளுளுஜளுவு சுசு என்றழைக்கப்படும் புனர்வாழ்வும், புதுவாழ்வும் அமைப்பு திட்டத்தை நெறிப்படுத்துகிறது.

# சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் உசவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்த மண்டப பூஜை இடம்பெற்று விநாயகப் பெருமான் மூஷிக வாகனத்தில் கொடித்தம்பத்துக்கு எழுந்தருளி அந்தண சிவாச்சாரியார்களின் வேத மந்திரம் முழங்க கொடியேற்ற உற்சவம் வெகுசிறப்பாக இடம் பெற்றது.

தொடர்ந்து15 தினங்கள் இடம்பெற உள்ள மகோற்சவ பெருவிழாவில் எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்பு அன்று தேர்த்திருவிழா இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய கொடியேற்ற உற்சவத்தில் பெருந்திரளான அடியவர்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானின் அருள்கடாட்சத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

# சுதேச மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்ற 1,650 பேரின் எதிர்காலம் கேள்விக்குறி!

## நாடாளுமன்றத்தில் சாணக்கியன் விசனம்



இலங்கையில் சுதேச மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்றவர்களில் நாடளாவிய ரீதியில் சுமார் 1,650 பட்டதாரிகள் அரசாங்க நியமனம் இன்றியும் எதிர்காலமும் இல்லாமலும், அன்றாடம் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆயுர்வேத சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் தனது கருத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

சுதேச மருத்துவத் துறையானது ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி ஆகிய மூன்று துறைகளையும் உள்ளடக்கியது. சித்த மருத்துவப் பாடத்திட்டத்தில் 5 ஆண்டுகள் இளங்கலைக் கல்வியும் அதன்பின் ஓராண்டு உள்ளகப் பயிற்சியும் உள்ளது. எவ்வாறாயினும் உண்மையில் அக்கல்வி முடிவடையும் நேரத்தில் 7-8 ஆண்டுகள் வரை நீடித்து செல்கின்றது.

இவர்களது அறிவு, திறமை மற்றும் சேவைகள் நாட்டுக்கு பயன்படாமல் வீணடிக்கப்படுகிறது. அதே நேரத்தில், பல ஆயுர்வேத மருத்துவமனைகள் மருத்துவர்கள் பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றன, மேலும் பொதுமக்களுக்கு தரமான சேவைகளை வழங்க முடியவில்லை.

இதுதவிர, பொதுமக்கள் பலர் தங்களை ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவர்கள் என்று கூறிக்கொள்ளும் போலி நபர்களை அணுகி வருகின்றனர். இதன் விளைவாக, அவர்கள் கடுமையான உடல்நலச் சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள். மேலும் இது நமது பாரம்பரிய சுதேச மருத்துவத்திற்கு கெட்ட பெயரைக் கொண்டு வருகிறது.

மூலிகைத் தோட்டம் மற்றும் மருத்துவம் தயாரித்தல் ஆகிய துறைகளில் இவர்களிடம் உள்ள பயிற்சி மற்றும் அறிவு மற்றும் இவற்றோடு சம்பந்தப்பட்ட திறன்கள் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. மற்றும் நாட்டில் பயன்படுத்தப்படும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளுக்கு இத்துறையை மேம்படுத்துவதன் மூலம் தீர்வு காண முடியும்.

இந்தப் பட்டதாரிகளில் ஒரு சிறிய சதவீதத்தினர் மட்டுமே அரசாங்கத்தால் நியமனம் பெறுகின்றனர். யாராவது பணியில் இருந்து ஓய்வு பெற்றால் மட்டுமே மற்றவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும் என்றால், இவர்களில் பெரும்பாலோர் எப்போதும் இந்தத் துறையில் வேலையில்லாமல் இருப்பார்கள்.

இந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் 50க்கும் மேற்பட்ட சித்த பட்டதாரிகள் கடந்த பல வருடங்களாக நிரந்தர வேலை கிடைக்காமல் உள்ளார்கள்.

குறிப்பிட்ட மருத்துவத் துறையில் பல ஆண்டுகளாகப் பயிற்சி பெற்றுள்ளதால், வாழ்வாதாரத்திற்கு வேறு தொழில்களைத் தேர்வு செய்ய முடியாத துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையில் உள்ளார்கள். இவர்களது அவல நிலையைக் கருத்தில் கொண்டு, சுதேச சித்த மருத்துவத் துறையில் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

புதிய ஆளணிகளை உருவாக்குவதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி இவர்களை உள்வாங்க வேண்டும்.

மருத்துவமனைகளில் தற்போது உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புதல் மூலம் இவர்களுக்கான பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற முடியும்.

இவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே 30 வயதைத் தாண்டிவிட்டனர், மேலும் ஒரு தொழில்முறை நிரந்தர வேலையைப் பெறுவதில் ஏற்படும் தாமதம் ஓய்வூதியப் பலன்கள், பதவி உயர்வுகள், சிறப்புப் பயிற்சிகள், அரசு வழங்கும் முதுகலை படிப்புகள் போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும். இவர்களது வாழ்க்கை கேள்விக் குறியாகின்றது. – என்று தெரிவித்தார்.

# மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை மீளாய்வு செய்ய சுயாதீன ஊதியக்குழு நியமனம்



அரசாங்க நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை மீளாய்வு செய்வதற்காக சுயாதீன ஊதியக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிதிக்குழுவிற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையில் இடம்பெற்ற அனைத்து கடிதத் தொடர்புகளின் அடிப்படையில், இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பு இல்லாத வகையில் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பளத் திருத்தம் என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் கடிதம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, சம்பள உயர்வு தொடர்பில் பரிசீலிப்பதற்காக நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

மேற்படி அறிக்கையை 4 வாரங்களுக்குள் அரசாங்க நிதிக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், கிடைக்கப்பெறும் விடயங்களின் அடிப்படையில் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு எட்டப்படும் வரை இலங்கை மத்திய வங்கி சம்பள அதிகரிப்பை ஒத்திவைக்க வேண்டும் என்றும் அரசாங்க நிதிக்குழு பரிந்துரைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.




# மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள், தாதியர்கள் கவனவீர்ப்பு

(மன்னார் நிருபர்)

அனைத்து தாதியர்களும் மூன்று மணித்தியாலங்கள் கடமையில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ள நிலையில் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் நேற்றுத் திங்கட்கிழமை மதியம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்கள் வைத்தியசாலை வளாகத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாதியர்களின் எதிர்நோக்கும் சம்பளம் மற்றும் சீருடை கொடுப்பனவு வழங்குதல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தினர்.

சுகாதார மற்றும் தாதியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்று தெரிவித்த அவர்கள் தமது கோரிக்கைகள் தீர்க்கப்படாவிட்டால் போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்க உள்ளனர் எனத் தெரிவித்தனர்.







# பண்டிகை வேளை விசேட பாதுகாப்பு

பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ இதனை அறிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் மக்கள் தமது மற்றும் தமது பொருள்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.



# வித்தியா கொலை வழக்கின் குற்றவாளி நியூமோனியாவினால் திடீர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் – புங்குடுத்தீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

37 வயதான பூபாலசிங்கம் தவக்குமார் என்பவர் கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சில நிமிடங்களிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

அவர் நியூமோனியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கில் சுவிஸ்குமார் என அறியப்படும் மாகாலிங்கம் சசிக்குமார் உட்பட 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வழக்கின் மேன்முறையீடு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

# 4 பில்லியன் டொலர் வருமானத்தை சுங்கத்திணைக்களம் இழக்கின்றது



## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

"பொருள்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் போது தவறான விலைப்பட்டியல் மூலம் ஆண்டு தோறும் 4 பில்லியன் டொலர் வருமானத்தை சுங்கத்திணைக்களம் இழக்கிறது. தவறுகளை திருத்திக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கி உரிய வழிமுறை முன்வைத்துள்ள போதும் அவை செயற்படுத்தப்படவில்லை."

– இவ்வாறு வழிவகைகள் பற்றிய நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது வழிவகைகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இலங்கையின் தேசிய வருமானத்தில் இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் முக்கிய பங்கு வகிக்கின்றன. இருப்பினும் இந்த நிறுவனங்கள் முறையாக வரி அறவிடுவதில்லை. இதனால் தொடர்ச்சியாக அரச வருமானம் நீக்கப்பட்டுள்ளது.

தேசிய இறைவரித் திணைக்களம் 2023.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 1066 பில்லியன் ரூபா வரியை அறவிடவில்லை. அத்துடன் 1 முதல் 5 ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் 656 பில்லியன் ரூபா இழக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சேர்பெறுமதி வரி 18 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. இதன் ஊடாக 600 பில்லியன் ரூபா வரி வருமானத்தை திரட்டிக்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

ஆனால் இறைவரித் திணைக்களம் பல கோடி ரூபா வரியை அறவிடவில்லை. இந்த வரிகளை முறையாக அறவிடுவதற்கு சட்டம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியுள்ளோம். இருப்பினும் நிதியமைச்சு முன்னேற்றகரமான அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

சுங்கத் திணைக்களத்தின் முறையற்ற செயற்பாடுகளினால் 58.6 பில்லியன் ரூபா வரி வருமானம் நீக்கப்பட்டுள்ளது. சுங்கத் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து தொழில்நுட்ப மட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து உரிய ஆலோசனைகள் வழங்கியுள்ளோம்.

பொருள்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் போது தவறான விலைப்பட்டியல் மூலம் ஆண்டுதோறும் 4 பில்லியன் டொலர் இழக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்படும் பொருள்களை சுங்கத்தில் உள்ள ஸ்கேனர்கள் மூலம் பறிமுதல் செய்வது செயலிழந்திருத்தல் மற்றும் தங்கம் போன்ற பெறுமதியான பொருள்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரும் போது செயற்படும் முறைமை தொடர்பில் புதிய திட்டங்களை வகுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

இலங்கை மதுவரித் திணைக்களம் 700 கோடி ரூபா வரியை அறவிடவில்லை. மதுபான உற்பத்தியில் முன்னிலையில் உள்ள இரு பிரதான நிறுவனங்கள் வரி வருமான இழப்பில் 70 சதவீத பங்கு வகிக்கின்றன. மது உற்பத்தியாளர்கள் வரி செலுத்த தவறுதல் மற்றும் மதுவரித் திணைக்களம் டிஜிட்டல் மயப்படுத்தல் தொடர்பாக தீவிர கவனம் செலுத்தப்பட்டது." – என்றார்.

# சீனப் பெரிய வெங்காயம் இலங்கையின் சந்தையில்

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தை புறக்கோட்டை மொத்த வியாபார சந்தையில் முதல் முறையாக வாங்க முடியும் என இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச்சீன வெங்காயம் ஒரு கிலோவின் மொத்த விலை 320 ரூபா எனவும் இந்த வெங்காயம் நல்ல நிலையில் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியாவும் பாகிஸ்தானும் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு தடைவிதித்ததையடுத்து, இலங்கையில் இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகினர்.

இதனையடுத்தே இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் சீனாவிலிருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளனர். நேற்று முதல் புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் சீன பெரிய வெங்காயம் விற்பனை செய்யப்படுவதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், பண்டிகைக் காலங்களில் வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றும் நுகர்வோர் தங்களுக்குத் தேவையான வெங்காயத்தை தட்டுப்பாடின்றி பெற்றுக் கொள்ளலாம் என்றும் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 02.04.2024




நீங்கள் உங்கள் வருங்காலத்திலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

பணிகளைப் பொறுத்தவரை இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக் காது. பணிச்சுமை அதிகமாகக் காணப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்கவைத் துக் கொள்வதற்கான நோக்கமும் ஆற்றலும் குறைந்து காணப்படும். நட்பான அணுகுமுறையைக் கையாளவும்.

பணப்புழக்கம் உற்சாகமளிக்கும் வகையில் காணப் படாது. கூடுதல் செலவினங்கள் செய்ய நேரிடும்.

மனஅழுத்தத்தின் காரணமாக கால் வலி மற்றும் முதுகு விறைப்பு போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இனிய பாடல்களைக் கேட்பதன் மூலம் உங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பய ணமும் மற்றும் சில மாற்றங்களின் காரண மாக உங்கள் தைரியத்தையும் உறுதி யையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உற வின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்றைய நாள் முற்போக்கான நாளாக அமைய நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். கவலையை விட்டொழித்து நம்பிக்கையுடன் இருங்கள்.

நீங்கள் செய்கின்ற பணியில் நல்ல பலன்களைக் காணலாம். நீங்கள் உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர் கள்.

உங்களின் நட்பான அணுகுமுறை மூலம் உங் களின் துணையை மகிழ்விப்பீர்கள். இது அவருடனான புரிந்துணர்வை அதிகரிக்கும்.

உங்களிடமுள்ள பணத்தைக் கொண்டு நலமாக இருப்பீர்கள். நீண்ட நாள் நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மிகுந்து காணப்படும்.




முக்கியமான முடிவுகள் எடுக்கும் போது சிறிது கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் பிரச்சினைகளைச் சந் திக்க நேரும்.

நீங்கள் பணி நிமித்தமாக ஒரு சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் மனதில் காதல் வயப்பட்ட எண்ணங்கள் காணப்படும். உங்கள் துணையுடனான நடத்தையில் அது வெளிப்படும்.

நல்ல விசேஷங்களுக்காக பணம் செலவு செய்ய நேரிடும். உங்கள் உடன் பிறந்தோர் வீட்டு விசேஷங் களில் பங்கேற்பீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உத வும்.




இன்று உற்சாகமாக காணப்படு வீர்கள். அதனால் திருப்தி ஏற்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடை வீர்கள்.

உங்களின் திறமை காரணமாக பணிகளை செவ்வனே செய்து முடிப் பீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனதில் உணர்ச்சிகரமான உணர்வுகள் காணப்படும். உங்கள் துணையுடனான உறவை இது வலுப்படுத்தும்.

நிதிநிலைமை நன்றாக இருக்கும். உங்களால் வங் கியில் பணத்தை சேமித்து சேமிப்பை அதிகமாக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியளிக்கும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.




பயண அலைச்சல்களும் அதன் காரணமாக சோர்வும் காணப்படும். உங்கள் முயற்சியில் நல்ல பலன்களைப் பெறுவதற்கு உங்களை அமைதியாக வைத்திருக்க முயலுங்கள்.

மிகுந்த முயற்சிகளை எடுத்து நிறைய வேலைகள் செய்த பொழுதும் உங்கள் மேல– திகாரிகளிடமிருந்து உங்களுக்கு பாராட்டுகள் கிடைக் காது.

உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் துணையிடம் சாந்தமான அணுகுமுறை வேண்டும். உங்கள் பதட்டமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவது நல்ல புரிந்துணர்வுக்கு அனுகூலமாக அமையாது.

பணம் நிறைய கிடைக்காது.




நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தாலும் நீங்கள் அதை சரிகட்டி செய்து முடிப் பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்துகொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

பணஇழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தொண்டை எரிச்சலுக்கான சாத்தியம் காணப்படு கின்றது. குளுமையான உணவு உட்கொள்வதை தவிர்த்தல் நல்லது.




அதிர்ஷ்டகரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண் பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிகள் நலம் பயப்பதாக காணப்படும். சலுகைகளும் ஊக்கத் தொகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது உங்க ளுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். பயனுள்ள வகையிலும் நல்ல செயலுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படுகின்றது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் தைரியமாகவும் உணர்வீர் கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.04.2024




உங்கள் பொறுமை சோதிக்கப்படும். என்றாலும் மேற்கொண்டு திட்டமிடுவதற்கு அது உங்களுக்கு நன்மை தருவதாக அமையும். பிரார்த்தனையில் ஈடுபடுவது மற்றும் மந்திரங்களை கேட்பது மன அமைதியை ஏற்படுத்தும்.

சிறப்புடன் பணியாற்றுவீர்கள். பதவி உயர்வு வடிவத்தில் பாராட்டுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் புரிந்துணர்வின் மூலம் உங்கள் துணையுடன் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்களின் அர்ப்பணிப்பான பணி காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அத்தகைய உற்சாகம் உஙகளுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வீர்கள். இன்று பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும்.

நீங்கள் உங்கள் பணியில் சவால்களை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். உங்கள் பங்கை நிறைவேற்றுவதற்கு உன்னதமான திட்டமிடல் வேண்டும்.

உங்கள் துணையுடன் நுண்ணுணர்வோடு காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணவரவிற்கான சாத்தியம் இல்லை. உங்கள் நிதிநிலையை நன்றாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




இன்று அனுகூலமான நாள். இன்று வெளிப்படையாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் உறுதியுடனும் நேர்மறையாகவும் இருங்கள்.

உங்கள் பணியை முறையான அணுகுமுறையுடன் கையாள வேண்டும் நேர்மறையான பலன்களைப் பெறுவதற்கு இது மிகவும் அவசியம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறை நன்மை தரும்.

தேவையற்ற செலவினங்களை சந்திக்கும் கட்டாயம் உண்டாகும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நடப்பவைகளை லேசாக எடுத்துக்கொள்வது நல்லது. அதிகமாக யோசிப்பதையும் மிகுந்த உணர்ச்சிவசப்படுதலையும் தவிர்க்க வேண்டும்.




சில நேர்மறையான மாற்றங்கள் உங்களை மகிழ்ச்சியான மன நிலையில் வைத்திருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். பணிச் சுமை காரணமாக நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மிகுந்த பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் கடுமையாக நடந்துகொள்ள நேரலாம். உங்கள் துணையிடம் பக்குவமான அணுகுமுறையை கையாள வேண்டும்.

பணப் பற்றாக்குறையை சந்திப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

தலைவலி அல்லது தொண்டை சம்பந்தமான வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.

